மின்னிதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 99 07.07.2023 (வெள்ளிக்கிழமை) வள்ளுவர் ஆண்டு 2054 பக்கங்கள் 9 ஊக்குவிப்பு : ரூ.30.00



பக்கம் 4

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைக்குழி!

## 13 மனித எச்சங்கள்!! : அகழ்வு இடை நிறுத்தம்!!!

## வவுனியாவில் கரும்பு செய்கை வந்தால் பாலைவனமாகும் வன்னி : சிவநேசன் எச்சரிக்கை



பக்கம் 4

வவுனியாவில் கரும்பு செய்கை வந்தால் வன்னி பாலைவனமாகும் என வடமாகாணசபையின் முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார். வட மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன், முல்லைத்தீவு ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றினை நடத்தியுள்ளார். இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் வவுனியாவில் கரும்பு செய்கைக்கு 70 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கப்படவுள்ளமை தொடர்பில் விபரமாக எடுத்துரைத்துள்ளார்.

ஒரு ஏக்கர் கரும்பு செய்கையால் வரும் வருமானத்தினை விட ஏனைய பயிர்களை செய்தால் 5 மடங்கு வருமானம் பெறப்படும், அத்துடன் கரும்பு செய்கைக்கு அதிகளவான நீர் தேவை என்பதை புள்ளி விபரம் ஊடாக தெரிவித்துள்ளார். இது ஏற்கனவே வடமாகாணசபையினால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது

## இராணுவ முகாம்களிலுள்ள பாரிய விகாரைகளின் கீழ் பகுதிகள் மனிதப் புதைக்குழிகள்..! சந்தேகிக்கிறார் ரவிகரன்



பக்கம் 4

முல்லைத்தீவு மாவட்டத்தில், சில இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள, பாரிய விகாரைகளின் கீழ் பகுதிகள் மனிதப் புதைகுழிகளாக இருக்கலாமென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக வட்டுவாகல் மற்றும், கேப்பாப்புலவு உள்ளிட்ட இராணுவமுகாம்களில் பாரிய அளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விகாரைகளைச் சுட்டிக்காட்டிய ரவிகரன், இராணுவ முகம்களில் அவ்வாறு

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் எதேச்சதிகாரமாக இடம்பெறுகின்றன : சுமந்திரன்



பக்கம் 4

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் அகழ்வுப் பணிகள் எதேச்சதிகாரமாக இடம்பெறுவதாக தமிழ்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப்பணிகள் இடம்பெறவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டு அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு

# முல்லைத்தீவு மனிதப் புதைகுழி விவகாரம்!: கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு!!

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி உண்மை விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

""இலங்கை அரசே கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி உண்மை, நீதி, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துக எனும் தொனிப் பொருளில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இன்று (07.07.2023) காலை 10.00 மணியளவில் குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பக்கம் 4

# கடலட்டைப் பண்ணைகள் நிறுத்தப்படாவிட்டால் சீனாவின் ரின்மீனையே வாங்கி உண்ண வேண்டிய நிலைவரும்..! அன்னராசா




கடற்தொழில் அமைச்சர் மீனவர்களின் கருத்தைச் செவி சாய்க்காது தொடர்ந்தும் 5000 ஏக்கரில் கடலட்டை பண்ணையை மீண்டும் வழங்குவேன் என கூறியுள்ள நிலையில் அதற்கெதிராக போராட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பாகவும் கலந்தாலோசித்துள்ளோம். கடலட்டைப் பண்ணைகள் நிறுத்தப்படாத நேரத்தில் எதிர்காலத்தில் சீனாவிடம் ரின்மீன் வாங்கி உண்ண வேண்டிய நிலை தோன்றும் என யாழ் மாவட்ட கடை தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அண்ணலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

வடமாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், சிலாபம், கொழும்பு கம்பகா , காலி மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலுள்ள கடற்தொழில் சமாசங்கள் , சங்கங்களின் பிரதிநிதிகளும் சட்ட ஆலோசகர்களும் இணைந்து கலந்துரையாடலொன்றை நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் காலை 11.00 மணியளவில் இடம் பெற்றது.

அதையடுத்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களோடு மொத்தமாக 15 கடலோர மாவட்டங்கள் ஒன்றிணைந்து மீனவ பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றை எவ்வாறு கையாளலாம் என்பது தொடர்பில் கலந்துரையாடினோம்.

இலங்கையில் மூன்று வருடங்களுக்கு முன் ஏற்பட்ட எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் நீர்கொழும்பு சட்டத்தரணி நிமாலினி குணரட்ணம் தலைமையிலே தொடுக்கப்பட்ட வழக்கிலே வடக்கு சங்கங்களையும் சமாசங்களையும் ஒன்றிணைக்குமாறு நாம் விடுத்த கோரிக்கையை ஏற்று நேற்று சட்டத்தரணி வருகைதந்து எங்களுடன் கலந்துரையாடி எங்களையும் இணைப்பதற்கு இணங்கியுள்ளனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் பாதிப்பானது எமது பிரதேசத்திலும் ஏற்பட்டதை கடந்த காலங்களில் ஊடகங்கள் வெளியிட்டன. குறித்த பாதிப்பால் கடலாமை, திமிங்கிலம் போன்றன இறந்து கரையொதுங்கிய நிலை காணப்பட்டது என எம் தரப்பு விடயங்களை முன்வைத்தோம்.

வடமாகாணத்தில் பாதிப்பாகவுள்ள உள்ளூர் இழுவைமடித் தொழிலை முற்றாக நிறுத்துதல், நீதிமன்றத்தை நாடுவது தொடர்பிலும் இந்தியா இழுவைப் படகுகளை நிறுத்துதல் தொடர்பாகவும் யாழ் மாவட்டத்திலே உள்ள சீன கடலட்டை பண்ணை தொடர்பான பாதிப்புக்கள் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது. இவற்றை விட கிளிநொச்சி பகுதிகளில் கம்பிப்பாடுகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதால் மீனவர்களின் படகு, வலைகள் சேதமாக்கப்படுகின்றன. இவற்றை கட்டுப்படுத்துதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கடற்தொழில் அமைச்சர் மீனவர்களின் கருத்தைச் செவி சாய்க்காது தொடர்ந்தும் 5000 ஏக்கரில் கடலட்டை பண்ணையை மீண்டும் வழங்குவேன் என கூறியுள்ள நிலையில் அதற்கெதிராக போராட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பாகவும் கலந்தாலோசித்துள்ளோம்.

கடலட்டைப் பண்ணைகள் கடந்த காலங்களில் கடற்தொழிற் சங்கங்கங்களின் அனுமதி பெற்றே வழங்கப்பட்டது. ஆயினும் தற்போது நீரியல் வளத் திணைக்களம், நெக்ரா, நாரா நிறுவனங்களின் அனுமதியே தேவை எனக் கூறுகின்றது.

இதைவிட பருத்தித்தீவில் சங்கத்தின் அனுமதியின்றி பண்ணை அமைக்கப்பட்ட நிலையில் பல பிரச்சினைகள் எழுந்தும் இதுவரை பண்ணைகள் அகற்றப்படாத நிலையுள்ளது. கடலட்டைப் பண்ணைகள் நிறுத்தப்படாத நேரத்தில் எதிர்காலததில் சீனாவிடம் ரின்மீன் வாங்கி உண்ண வேண்டிய நிலை தோன்றும்.

சட்டங்கள் பல இருந்தாலும் அவை அமுல்படுத்தப்படாமல் உள்ளது அவற்றை அமுல்படுத்த அழுத்தங்களை பிரயோகிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நாங்கள் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் இல்லை எதுவாயினும் மக்களின் அனுமதியைப் பெற்றே மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

# முதலில் 13ஐ அமுல் செய்ய இலங்கை அரசை சர்வதேசம் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும் - மனோ, செல்வம், சித்தர் கூட்டாக வலியுறுத்து!



"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறையவே பேசுகின்றார். குறைவாகவே செய்கின்றார். அரசமைப்பு சட்டத்தில் உள்ள 13 ஆவது திருத்தத்தை அமுல் செய்து முதலில் தமது நேர்மையை பறை சாற்றும்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கனடா, அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலியா, ஜப்பான் உள்ளடங்கிய சர்வதேச சமூகம் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும். இதற்கு கனடா முன்முயற்சி எடுக்க வேண்டும். நாட்டை வெளியேறிய தமிழர் பெருந்தொகையினருக்கு அடைக்கலம் கொடுத்துள்ள நாடு என்ற வகையில் கனடாவுக்கு இதற்கு உரிமை உள்ளது."

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., தமிழீழ விடுதலை இயக்க தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி. ஆகியோர், கனேடிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகார பணிப்பாளர் நாயகம் மரியா லூயிஸ் ஹனானிடம் நேரில் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

"13 ஆவது திருத்தம் தேசிய இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு அல்ல. இது எமக்குத் தெரியும். ஆனால், புதிய சட்டங்களை உருவாக்க முன், அரசமைப்பு சட்டத்தில் இன்று இருக்கும் 13 ஆவது திருத்த அதிகாரப் பகிர்வு சட்டதையும், 16 ஆவது திருத்த மொழியுரிமை சட்டதையும் அமுல் செய்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காட்டட்டும். அதை சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும். இன்று நாம் இலங்கை அரசுடன் பேசி சலித்துப் போய் விட்டோம். அதேபோல் சர்வதேச சமூகத்திடமும் மீண்டும் இவற்றையே பேசி சலித்துப் போய் கொண்டிருக்கின்றோம்" - என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள கனேடியத் தூதுவரின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வெல்ஷ், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி சின்னையா இரத்தின வடிவேல், கனேடியத் தூதரக அரசியல் அதிகாரி கோபிநாத் பொன்னுத்துரை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. விடுத்துள்ள ருவீட்டர் பதிவில்,

"பன்மைத்தன்மையை கொண்டாடுவது, அதிகாரப் பகிர்வு, 13ம் திருத்தம், மொழியுரிமை மற்றும் சமத்துவம், ஆகியவை பற்றி கனேடியத் தரப்புடன் பயன்தரும் விதத்தில் பேசப்பட்டன" - என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சி பிரதிநிதிகள், கனேடிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரப் பணிப்பாளர் நாயகத்திடமும், இலங்கைக்கான கனேடியத் தூதுவரிடமும், இந்த நாட்டை சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடு எனத் தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும், இத்தகையை கொள்கையை முன்னெடுக்கும் எந்தவொரு கொழும்பு அரசையும் தாம் எதிர்த்துப் போராடுவோம் எனவும் கூறினர்.

தமது அபிலாஷைகள் தொடர்பில் அரசுடன் பேச்சு நடத்துவதைப் போன்று, சர்வதேச சமூகத்திடம் எடுத்துக் கூறுவதிலும் சலிப்படைந்து வருகின்றார்கள் என்று தமிழ்த் தலைவர்கள் இன்று கூறியதைத் தாம் புரிந்துகொள்வதாகவும், அது தமக்கு ஒரு செய்தி என்றும் கனேடியத் தரப்பினர் தம்மைச் சந்தித்த கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தனர்.



# சீனி நிறுவனத்திற்கு வன்னியில் காணி

## தமிழ் மக்களுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்! விக்கி எம்.பி.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய வன்னியில் உள்ள அரச காணி, தனியார் நிறுவனமொன்றுக்கு பணப்பயிரை பயிரிடுவதற்கு வழங்கப்படவுள்ளதாகவும் இது அப்பகுதி தமிழ் மக்களுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் எனவும் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தானும் முன்னர் நிராகரித்த கரும்புச் செய்கை வன்னியில் செயற்படுத்தப்படவுள்ளதாகவும், கரும்புச் செய்கை அந்த நிலத்திற்கு பொருத்தமற்ற பயிர்ச் செய்கை.

நான் முதலமைச்சராக இருந்தபோது சீனித் தொழிற்சாலை தொடர்பான கோரிக்கையை நிராகரித்தேன். இதுகுறித்து விவசாய அமைச்சராக இருந்த ஐங்கரநேசன் ஆய்வு செய்தார்.

இதனால் இலாபத்தை விட நட்டம் ஏற்படும் என அவர்கள் தெரிவித்தமையால், இதுத் தொடர்பில் அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தி இந்த திட்டத்தை நான் நிறுத்தினேன்.

தாய்லாந்து நிறுவனத்தினால் வவுனியாவில் நிர்மாணிக்கப்படவுள்ள சீனி தொழிற்சாலைக்கு 200 ஹெக்டேயர் காணியை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த ஜூலை 26ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றிருந்தார்.



இந்த திட்டத்துடன் தொடர்புடைய தொழிற்சாலை வளாகம் மற்றும் தொடர்புடைய வசதிகளுக்காக, வனவள பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான, வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட 200 ஹெக்டேயர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட திட்டத்தை செயற்படுத்துவதற்காக, வனவள பாதுகாப்புத் திணைக்களம் அந்த நிலத்தை வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. என ஜூலை 26 அன்று அமைச்சரவை தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிய நீர்ப் பிரச்சினையை எதிர்நோக்கும் வன்னியில் கரும்புச் செய்கையால் அப்பகுதி பொது மக்களின் நீர்த்தேவைக்கு பாதிப்பு ஏற்படுமென தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பயிர் எங்கள் நிலத்திற்கு ஏற்றதல்ல. கரும்பு செய்கைக்கு அதிக தண்ணீர் தேவை. அதனால், நீர் இல்லாத பகுதியில் கரும்பு செய்கையை மேற்கொள்ளும் போது, சாதாரண மக்களின் தண்ணீர் தேவைகளுக்கு சிக்கல் ஏற்படும். அதனைவிட மண்ணின் அனைத்து சக்திகளையும் கரும்பு உறிஞ்சுக்கொள்ளும்.

இதுபோன்ற பல பிரச்சனைகள் காணப்படுகின்றன. இதற்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விடுவிக்கப்படவுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதியினால் இந்த அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழர்களிடம் இருந்து வலுக்கட்டாயமாக கையகப்படுத்தப்பட்ட வன்னி காணிகளை அரசாங்கம் விடுவிக்கவில்லை எனவும், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் அரச காணிகளை கரும்புச் செய்கைக்காக தனியார் நிறுவனத்திற்கு வழங்க அரசாங்கம் திட்ட மிட்டுள்ளதாகவும் உள்ளூர் அரசியல்வாதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 30,000 ஏக்கர் அரச காணியை கரும்புச் செய்கைக்காக தனியார் நிறுவனத்திற்கு வழங்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமைச்சரவையில் முன்மொழிந்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 13வது திருத்தத்தை திணிக்கின்ற முயற்சிகளுக்கு தமிழ் கட்சிகள் ஒருபோதும் துணை போகக்கூடாது..! யோதிலிங்கம் வேண்டுகோள்..!



பதின்மூன்றாவது திருத்தத்தை திணிக்கின்ற முயற்சிகளுக்கு தமிழ் கட்சிகள் ஒருபோதும் துணை போகக்கூடாது. அது இலங்கை -இந்திய அரசுகள் பேசி முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தம். இது எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு தீர்வாக அமையாது. ஆகவே இது தொடர்பாக தமிழ் கட்சிகள் தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநரும் அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அலுவலகத்தில் நடாத்திய ஊடக மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

13வது திருத்தம் தற்போது மீண்டும் பேசு பொருளாகி வந்திருக்கிறது. இந்தியா எவ்வாறாயினும் பதினொன்றாவது திருத்தத்தினை அரசியல் தீர்வாக திணிப்பதற்கான முயற்சிகளை மேற் கொண்டு வருவதாக தெரிகிறது.

தமிழ் நாட்டினுடைய பாரதிய ஜனதா கட்சியினுடைய மாநில தலைவர் அண்ணாமலை அவர்கள் புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று குறிப்பாக லண்டனுக்கு சென்று புலம்பெயர் தரப்புகளோடு 13 வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பேசியிருக்கிறார்.

சர்வதேச நாணய நிதியம் இன்று எப்பாடு பட்டாவது இனப் பிரச்சினையை தீருங்கள் என்று ஒரு நிபந்தனையை வைத்ததாக கூறப்படுகிறது. அதேபோல படையினர் உடைய எண்ணிக்கையை ஒரு இலட்சமாக குறைக்குமாறு நிபந்தனை வைத்ததாகவும் சொல்லப்படுகிறது

ஆகவே இலங்கை அரசாங்கத்தை பொறுத்த வரையில் ஏதோ ஒரு வகையில் இந்த பிரச்சனையை தீர்க்க வேண்டிய ஒரு கட்டாயம் வந்திருக்கிறது. இந்தியாவிற்கும் இனப் பிரச்சனை தீர்வு தொடர்பில் 13 க்கு அப்பால் செல்வதற்கான விருப்பங்கள் எவையும் இல்லை.

இந்த நிலையில் தமிழ் தரப்பை எப்படியாவது 13வது திருத்தச் சட்டத்தை எப்படியாவது ஏற்க வைக்க வேண்டும் என்கின்ற என்கின்ற ஒரு வகையான அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

13வது திருத்தம் ஏற்கனவே யாப்பில் உள்ள ஒரு விடயம். அதனை நடைமுறைப்படுத்தப்படுவது அரசினுடைய கடமை. இதைவிட பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பான பொறுப்பு தமிழ் மக்களுக்கு இல்லை. ஏனெனில் 13வது திருத்தம் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டது.

அது இரண்டு அரசுகளில் தங்களுக்குள் பேசி கொண்டுவரப்பட்ட ஒரு திட்டம்.தமிழ் மக்களுக்கு அது தொடர்பான எந்த விதமான பொறுப்பும் இல்லை. அதே வேளையில் அரசியல் தீர்வாக திணிக்கின்ற ஒரு முயற்சி இடம்பெறுகிறது. ஆகவே இந்த முயற்சியை தமிழ் மக்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

13வது திருத்தம் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை தீர்த்துக் கொள்வதற்கு எந்த வகையிலும் போதுமானதாக இல்லை. அது ஒரு ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு அரசியல் தீர்வு.

ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு திருத்தம் தான் 13 வது திருத்தம். ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட எந்த அதிகார பகிர்வும், நடைமுறையில் தமிழ் மக்களுக்கு எந்வித பயனையும் தரப்போவதில்லை.

இதைவிட பல நெருக்கடிகள் 13 வது திருத்தத்தில் இருக்கின்றன.

ஒன்று ஆளுநருடைய அதிகாரம். நிர்வாக துறையை அதிகாரம் முழுமையாக ஆளுநரிடமே இருக்கிறது. முதலமைச்சரும் அமைச்சரும் வெறுமனே அவர்கள் ஒரு ஆலோசனை கூறுபவர்களாக மட்டும் தான் இருக்கிறார்கள்.

மாகாண சபை சட்டம் இயற்றுவதில் பல்வேறு தடைகள் இருக்கிறது பாராளுமன்றம் ஒரு தடை, ஆளுநர் ஒரு தடை, ஜனாதிபதி ஒரு தடை, சட்டமா அதிபர் ஒரு தடை, உயர் நீதிமன்றம் ஒரு தடை, ஒரு தடை என்று சொல்லி பல தடைகள் இருக்கின்றன.

இதைவிட தமிழ் மக்களினுடைய கூட்டிருப்பை, கூட்டுரிமையை, கூட்டு அடையாளத்தை, பேணக்கூடிய வகையிலே வடக்கு கிழக்கு இணைக்கப்படவில்லை. அது இப்போது பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே இவ்வாறான ஒன்றை தமிழ் மக்கள் ஒருபோதும் அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாது. இது தொடர்பாக ஆதரிக்கின்ற தமிழ் கட்சிகள் இது தொடர்பாக முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது பதிமூன்றாவது திருத்தை நடைமுறை படுத்துவது என்பது வேறு. அதனை அரசியல் தீர்வாக திணிப்பது என்பது வேறு. இங்கே நடைமுறைப்படுத்துவது என்று சொலிக் கொண்டு அரசியல் தீர்வாக திணிக்கின்ற முயற்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த திணிக்கின்ற முயற்சிகளுக்கு தமிழ் கட்சிகள் ஒருபோதும் துணை போகக்கூடாது. அவ்வாறு துணை போனால் அது தமிழ் மக்களுக்கு செய்கின்ற மிகப்பெரிய துரொகமாகத்தான் இருக்கும் என நான் நினைக்கின்றேன். அவ்வாறு அவர்கள் போவார்களே ஆனால் அவர்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதை தவிர வேறு வழி இல்லை என்றே நான் நினைக்கிறேன்.

இந்தியாவிற்கு பதின்மூன்றாவது திருத்தம் தேவை என்று சொல்லிச் சொன்னால் 13வது திருத்தத்தை சமஸ்டி முறைமை ஆக்குங்கள்.

பதின் மூன்றாவது திருத்தத்தில் நான்கு வகையான திருத்தங்களை கொண்டு வந்தால் அதனை சமஸ்டியாக மாற்ற முடியும். இலங்கை இந்திய அரசியல் யாப்பில் உறுப்புரை இரண்டு சொல்கிறது இலங்கை ஒரு ஒற்றை ஆட்சி அரசு என்று.

இந்த ஒற்றை ஆட்சி அரசு என்பதை மாற்றி விடுங்கள். அதேவேளையில் பாராளுமன்றம் அதன் சட்ட வாக்கத்தை துறத்தலோ பாராயணப்படுத்தலோ ஆகாது என்று அதன் உறுப்புரிமை 76 சொல்கிறது. ஆகவே அந்த 76 ஐ நீக்குங்கள். ஆளுநரிடம் உள்ள அதிகாரங்களை முதலமைச்சரை கொண்ட அமைச்சரவையில் ஒப்படையுங்கள்.ஆளுநரை பேரளவில் நிர்வாகி ஆக்குங்கள் .மூன்று அதிகாரப் பட்டியல் இருக்கின்றன.

மூன்று அதிகார பட்டியல் இருக்கிறது. ஒத்தியங்கு பட்டியலை நீக்கிவிட்டு ஒத்தியங்கு பட்டியலில் உள்ள அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்குங்கள். மாகாண சபை அதிகாரங்களாக மாற்றுங்கள். வடக்கு கிழக்கை இணையுங்கள்.

இந்த திருத்தங்களை செய்தால் 13ஆவது திருத்தத்தை சமஸ்டியாக மாற்ற முடியும். அப்படி என்று சொன்னால் நாங்கள் அதனை ஆதரிக்க தயாராக இருக்கின்ற ஒரு சூழலை உருவாக்க முடியும்.

அதுமட்டுமன்றி இப்போது இருக்கின்ற 13 வது திருத்தத்தை ஒரு அரசியல் தீர்வாக திணிக்க முற்பட்டால் ஒருபோதுமே தமிழ் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது ஏற்றுக் கொள்ள முடியாது. இதுதான் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினுடைய எங்களுடைய நிலையான கருத்தாகும் என்றார்.

தேசியம் THESIYAM www.thesiyamnews.com

## கொக்குத்தொடுவாய் மனிதப்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட பகுதியில் வியாழக்கிழமை (06) அகழ்வு பணிகள் இடம்பெற்றன.

இந்நிலையில் மாலை 03.30மணியளவில் அகழ்வுப் பணிகள் இடை நிறுத்தப்பட்டதுடன், குறித்த மனிதப் புதைகுழி தொடர்பில் எதிர்வரும் வியாழக்கிழமை (13.07.2023) அன்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் அகழ்வுப் பணிகளுடன் தொடர்புடைய திணைக்களங்கம் மற்றும், அமைப்புக்களுடன் விசேடகலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அக்கலந்துரையாடலைத் தொடர்ந்தே அகழ்வுப் பணிகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறிப்பாக காலை 10.00மணியளவில் தொடங்கிய குறித்த அகழ்வுப்பணிகள், மாலை 03.30மணிவரையில் இடம்பெற்றன.

இவ்வாறு இடம்பெற்ற அகழ்வுப் பணிகளின் பிரகாரம் 13 பகுதிகளில் 13 மனித எச்சங்கள் இனங்காணப்பட்டு, அவ்வாறு இனங்காணப்பட்ட இடங்கள் தடயவியல் பொலிசாரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவா, தடையவியல் பொலிசார் உள்ளிட்டவர்களினால் இந்த அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகப் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு மனித உரிமை சட்டத்தரணிகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், வல்லிபுரம் கமலேஸ்வரன், பொது அமைப்புகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலரது கண்காணிப்புகளுக்கு மத்தியில் இந்த அகழ் பணிகள் இடம்பெற்றன.

கடந்த 29.06.2023 அன்று மாலை முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்தி பகுதியில் தேசிய நீர்வழுங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தினை தோண்டியபோது நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தினை தொடர்ந்து கொக்கிளாய் பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கொக்குளாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர் .

இது தொடர்பாக 30.06.2023 நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா அவர்கள் குறித்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது குறித்த மனித எச்சங்கள் காணப்படுகின்றன பகுதியில் யூலை 6 திகதி அகழ்வு பணிக்கு நீதிபதி உத்தரவிட்டதோடு அதற்குரிய நபர்களுக்கான உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறும் அதுவரை எச்சங்கள் அழிவடையாமால் பாதுகாக்குமாறும் கொக்கிளாய் பொலிசாருக்கு பணிப்பு விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் கரும்பு செய்கை...

என்பதையும் தெரிவித்துள்ளார்.

12 தொடக்கம் 14 மாதங்கள் கரும்பு செய்கைக்கான அறுவடை காலம் இவ்வாறான காலத்திற்குள் ஏனைய பயிர்களை செய்து அதிக இலாபத்தினை ஈட்டலாம் என ஆராச்சியால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் கரும்பு செய்கை செய்து அனுபவப்பட்ட யாரும் கிடையாது. இலங்கை அரசாங்கத்தின் கரும்பு செய்கை மேற்கொண்டு சீனி உற்பத்தி செய்யப்பட்ட கந்தளாய் சீனி தொழில்சாலைக்கு சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் இன்று தரிசாக கிடக்கின்றன.

கரும்பு செய்கைக்கு மிகஅதிகமான நீர் தேவைப்படுகின்றது இதனால் வவுனியா வடக்கு பாலைவனமாகும். இவ்வளவு இந்த மக்களின் வாழ்வாதாரத்தினை சீரழித்து இந்த கரும்பு செய்கையினை செய்கை பண்ண வேண்டுமா? என்றுதெரிவித்த அவர்,

முதலாளித்துவ போக்குடைய ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இங்குள்ள தொழிலாளர்களின் நிதியினை பயன்படுத்தி பொருளாதாரத்தினை நிவர்தி செய்யப்பட வேண்டும் என்ற விடயத்தில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை இதில் பாதிக்கப்படபோவது யார் என்றால் தொழிலாளர்கள்தான்.

ஆனால் இன்று இலங்கையில் இருக்கின்ற பண முதலாளிகளாக இருப்பவர்கள் யார் என்று பார்த்தால் கடந்த காலத்தில் அரசியல் தலைமைத்துவத்தினை ஏற்றிருந்தவர்கள் தான் மிகப்பெரிய பணத்தினை கொண்டிருக்கின்றார்கள்.

அனேகமானவர்கள் வெளிநாடுகளில் மூன்றாவது மண்டல நாடுகளில் மிகப்பாரியளவில் முதலீடுகளை செய்துள்ளார்கள்.

இந்த முதலீடுகளை எல்லாம் மீண்டும் நாட்டிற்கு கொண்டுவந்து அவர்கள் இங்கே செய்வார்களாக இருந்தால் கடன் மறுசீரமைப்பினை மிக இலகுவாக சமாளிக்க முடியும்.

முதலாளிகளின் முதலீடுகளிலோ அல்லது அவர்களின் எந்த பணத்திலும் கைவைக்காமல் வெறும் தொழிலாளர்களின் பணத்தில் கைவைத்து கடன் மறுசீரமைப்பினை செய்வது இந்த மக்களை மிகமோசமாக வழி நடத்துவதற்கான முன்னுதாரணம் என்று தான் நான் கூறுவேன்.

உள்ளாட்டு கடன் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டிய விடையம் அதனை எப்படி செய்ய வேண்டும் என்பதற்கு இந்த முதலாளித்துவம் ஒருபோதும் இடமளிக்காது

வளமானா நாடு ஏன் ஏழையாக இருக்கின்றது என்பதற்கு ஆட்சியாளர்கள்தான் பதில்சொல்ல வேண்டும்.

இந்த பொருளாதாரத்தினை மறுசீரமைப்பதற்கோ அல்லது பொருளாதாரத்தினை மக்களின் வாழ்வாதாரத்தினை கட்டி எழுப்புவதற்கோ எந்த ஒரு வேலைத்திட்டமும் இதுவரைக்கும் எந்த ஒரு அரசும் வைக்கவில்லை.

இந்த கரும்பு செய்கையினையும் இவ்வாறு தான் பார்க்கலாம் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவினை முன்னர் சொல்வார்கள் தெற்காசியாவின் ஒரு நரி என்று அது மாதிரியான ஒரு நரிதான் இப்போதும் ஆட்சி செய்கின்றது.

இவர்களை பொறுத்தமட்டில் மேலோட்டமாக பார்க்கும்போது இப்போது இருக்கின்ற ஜனாதிபதி நல்லவர் இராணுவம் வைத்திருக்கும் காணிகளை விடுவிக்கின்றார் நல்லவர் வல்லவர் என்றுதான் தெரியும்.

ஆனால் கரும்பு செய்கை என்று குடியேற்றுவதற்காக வவுனியா வடக்கில் இவ்வளவு பெருந்தொகையான வனவளத்தினை அழிப்பதற்கும் தயாராக இருக்கின்றார் என்கின்றபோது இதன் உள்நோக்கம் என்ன என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொக்குத்தொடுவாய் மனிதப்...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த அகழ்வுப் பணிகள் ஒரு குறித்த முறைப்படி செய்வதாகத் தெரியவில்லை.

சர்வதேச ரீதியிலே இந்த அகழ்வுப் பணிகள் எப்படியாகச் செய்யப்படவேண்டும் என்பதற்கு பல நியதிகள் உண்டு. அந்த நியதிகள் எவையும் இங்கு பின்பற்றப்படுவதாகத் தெரியவிலலை. இந்த அகழ்வுப்பணிகள் எதேச்சதிகாரமாகச் செய்யப்படுகின்றன.

வைத்தியர் இங்கே இருந்தாலும்கூட, சாதாரணமாக ஒரு புதைகுழியிலே ஒரு மனித உடலைத் தோண்டி எடுத்து செய்யப்படுகின்ற பரிசோதனைக்கும், இப்படியாகப் பல உடல்கள் மனிதப் புதைகுழியாக இருக்கின்ற பகுதி தோண்டப்பட்டு எடுப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு.

இதைச் செய்வதற்கான சர்வதேச நியதிகள் ஏராளமாக இருக்கின்றன. அந்த நியதிகளைப் பின்பற்றியே இந்த அகழ்வுப்பணிளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் இங்கே அப்படியாக அகழ்வுப் பணிகள் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

கடந்த 05.07.2023அன்று மன்னார் நீதிமன்றிலும், மன்னாரில் இனங்காணப்பட்ட புதைகுழி தொடர்பிலான வழக்கு மீளவும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த எல்லா விடயங்களிலேயும் திருப்திகரமான முறையிலே இந்த அகழ்வுகள் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

இது இந்த நாட்டிலே பல ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் ஆக்கப்பட்ட ஒரு சூழ் நிலையிலே, இவ்வாறான சாட்சியங்கள் கிடைக்கிறபோது, அவை மிகவும் கவனமாக சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையிலே விசாரிக்கப்பட்டு, அகழ்வுகள் செய்யப்படவேண்டும்.

ஆனால் இப்படியாக எதேச்சதிகாரமாகச் செய்வதும், அகழ்வுப்பணிகள் இடம்பெறுகின்ற இடங்களில் அகழ்வுப்பணிகளில் ஈடுபடுபவர்கள், வைத்திய அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். சிலவேளைகளில் நீதவான்கள்கூட இடமாற்றம் செய்யப்படுகின்றார்கள்.

ஆகையினாலே இதிலேயிருந்து உண்மையினைக் கண்டறிவதற்கு அரசிற்கு முழுமையான மனதில்லாமல் இருப்பதும், இன்னொருபடி மேலே சொன்னால் இவற்றை எல்லாம் மூடி மறைப்பதும்தான் அரசுடைய நோக்கமாக இருப்பது புலனாகிறது.

குறிப்பாக இந்த இடத்திலிருந்து எடுக்கப்படுகின்ற சான்றுப் பொருட்கள்கூட கவனமாகப் பேணிப் பாதுகாக்கப்படவில்லை. அதனை இங்கே நேரடியாக எம்மால் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

எடுக்கப்பட்ட சான்றுப்பொருட்கள் பாதுகாப்பின்றி, பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை எவரும் எடுத்துக்கொண்டு போகக் கூடிய வகையிலேயே குறித்த சான்றுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருப்பதை அதானிக்கக்கூடியதாகவிருந்தது.

அதேவேளை இந்த இடத்தினை எவ்வாறாகப் பாதுகாப்பாக வைத்திருக்கப்போகின்றார்கள் என்பதிலும் கேள்விகள் இருக்கின்றன.

இந்த அகழ்வுப்பணிகளை இடை நிறுத்தி இன்னொரு நாளில் அகழ்வுப்பணிகளைச் செய்வதாகயிருந்தால் என்னவிதமாக இந்த இடத்தினைப் பாதுகாப்பாக வைத்திருக்கப்போகின்றார்கள்.

பொலிசாரின் கைகளில் இந்த இடத்தை விடப் போகின்றார்களா, இது வேலியே பயிரை மேய்கின்ற கதையாக அமைந்துவிடக்கூடாது.

புலனாய்வாளர்கள் ஏராளமாக இங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர். பல புலனாய்வாளர்கள் இங்கே புகைப்படங்கள் எடுப்பதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

ஆகவே புவனாய்வாளர்கள் இங்கு வந்து, இங்கேயிருந்து யார் என்ன செய்கின்றார்கள் என்ற தகவல்களை கிரமமாக அனுப்பிக்கொண்டிருக்க, இந்த விடயங்களை மறைக்க நினைக்கிறவர்கள் அடுத்த நடவடிக்கைக்கு தயாராவார்கள்.

ஆகையினாலே இது சரியான விதத்திலே பாதுகாக்கப்படவேண்டும். சரியான முறையிலே, சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையிலே இந்த அகழ்வுப்பணிகள் இடம்பெற வேண்டும்.

அதற்கான சர்வதேச நிபுணத்துவம், மேற்பார்வை உடனடியாகக் கொண்டுவரப்பட வேண்டும் - என்றார்.

## இராணுவ முகாம்களிலுள்ள...

பாரிய அளவில் விகாரைகள் நிர்மாணிக்கப்பட வேண்டிய அவசியம் என்ன? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்பில் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் பகுதி நீண்டகாலமாக ஒரு சூனியப் பிரதேசமாக இருந்த ஒரு பகுதியாகும். கடந்த 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இங்கிருந்த தமிழ் மக்கள் அனைவரையும் இராணுவம் வெளியேற்றியது. அப்போதிருந்து நீண்ட காலமாக கொக்குத் தொடுவாய் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த ஒரு சூனியப் பகுதியாக காணப்பட்டது.

கடந்த 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் மௌனிக்கப்பட்டபோது சரணடைந்தவர்கள் பேருந்துகளில் ஏற்றப்பட்டு சில இடங்களுக்கு கொண்டுசெல்லப்பட்டதாக நாம் அறிகின்றோம்.

அவ்வாறு சரணடைந்தவர்கள்கூட இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்டு, பின்னர் இராணுவ சூனியப் பிரதேசமான இங்கே கொண்டுவந்து புதைக்கப்பட்டிருக்கக்கூடிய வாய்ப்புக்கள்கூட இருக்கின்றன.

தற்போது இங்கே அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளும்போது பல மனித எச்சங்கள் தொடர்ந்தும் தென்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் இங்கு அகழ்வுப் பணிகள் முறையாக இடம்பெறுவதாக எமக்குத் தெரியவில்லை. இங்கு அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் பாதுகாப்பின்றி பெட்டிகளில் வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

எனவே சரியான விதத்தில் இந்த அகழ்வுப் பணிகளுடைய முடிவுகள் இருக்குமா என்பதிலும் எமக்கு சந்தேகமிருக்கின்றது.

சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் இந்த அகழ்வுப்பணிகளில் ஈடுபடவேண்டும் என்பதுடன், சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில், சர்வதேச நியதிகளைப் பின்பற்றி இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெறவேண்டும் என்பது எமது கோரிக்கையாகவிருக்கின்றது.

இறுதிக்கட்டப் போரின்போது சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளுக்கு மன்னிப்பு வழங்காது, சரணடைந்தவர்கள் படுகொலைசெய்யப்பட்டு, இங்கு புதைக்கப்பட்டிருப்பதாகவே மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இதனைவிட இங்குள்ள முக்கியமான இராணுவ முகாம்களில், குறிப்பாக வட்டுவாகல், கேப்பாப்புலவு, போன்ற இடங்களில் பாரிய புத்தவிகாரைகள் நிறுவப்பட்டுள்ளன.

ஆனால் அவ்வாறு பாரிய அளவில் இராணுவ முகாம்களில் விகாரைகள் அமைக்கவேண்டிய தேவையில்லை.

பல இராணுவ முகாங்களில் சிறிய அளவிலான விகாரைகள் அமைக்கப்பட்டிருக்கும்போது கேப்பாப்புலவு, வட்டுவாகல் உள்ளிட்ட சில இராணுவமுகாம்களில் இவ்வாறு பாரிய அளவிலான விகாரைகள் நிறுவப்பட்டுள்ளதன் சூட்சுமம் என்ன?

இவ்வாறான இராணுவமுகாம்களில் அமைந்துள்ள விகாரைகளின் கீழ்பகுதிகளில், இறுதிக்கட்டப் போரில் சரணடைந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டு, அவர்களின் சடலங்கள் புதைக்கப்புட்டுள்ளதா என்ற சந்தேகங்களும் எழுகின்றன.

எனவே இவ்வாறான இராணுவ முகாம்கள், இராணுவ முகாம்களிலுள்ள பாரிய விகாரைகளையும் சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் அகழ்ந்து ஆராய்வதற்குரிய சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

ஏன் எனில் யுத்தம் மௌனிக்கப்பட்டு சுமார் 14 ஆண்டுகளுக்கு மேலாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது காணாமல் ஆக்கப்பட் உறவுகளைத் தேடித் தொடர்ந்து போராடிவருகின்றனர். ஆனால் தொடர்ந்து மாறிவரும் அரசாங்கங்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு உரிய பதிலை வழங்குவதாகத் தெரியவில்லை.

இந் நிலையில் போர்மௌனிக்கப்பட்டபோது கையளிக்கப்பட்ட உறவுகளின் நிலை என்ன? அது தொடர்பில் இலங்கை அரசு இதுவரையில் முறையான பதிலை வழங்காததன் காரணமென்ன?

எனவே எமது மக்களின் வலியுணர்ந்து சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில், சர்வதேசத்தின் பங்களிப்புடன் நீதியானதும் நியாயமானதுமான விசாரணையை கோருகின்றோம். அதனடிப்படையில் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - என்றார்.

## முல்லைத்தீவு மனிதப் புதைகுழி...

இவ்வார்ப்பாட்டத்தினை முல்லைத்தீவு மாவட்ட பொதுமக்கள் மற்றும், பொது அமைப்புக்கள் என்பன இணைந்து முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு அனைவரையும் வருமாறு முல்லைத்தீவு மாவட்ட பொதுமக்கள் மற்றும், பொது அமைப்புகள் அழைப்புவிடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் நீதவான் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டன. கடந்த ஜூன் மாதம் 29ம் திகதி நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் மத்திய கொக்குத்தொடுவாய் பகுதியில் நிலத்தடி தண்ணீர்க் குழாய்களைப் பொருத்துவதற்காக வீதியோரம் குழி தோண்டப்பட்ட போது இந்த மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது.

பாரிய புதைகுழி என சந்தேகிக்கப்படும் இடத்திலிருந்து கடந்த 29ஆம் திகதி பெண்கள் மற்றும் ஆண்களின் ஆடைகளும் எலும்பு உள்ளிட்ட மனித எச்சங்கள் என்பன பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்ட திருத்தங்களை

## நீதி அமைச்சரிடம் கையளித்தோம் - ரிஷாத் சபையில் தெரிவிப்பு



முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் தொடர்பில் முன்னாள் நீதி அமைச்சர் அலிசப்ரி அமைத்த குழுவினர் சமர்ப்பித்த ஆலோசனைகளில் உடன்பட முடியாதென்பதினால் 18 முஸ்லிம் எம்.பி.க்கள் கையொப்பமிட்டு பௌசி எம்.பி. தலைமையில் முஸ்லிம், விவாக, விவாகரத்து சட்டம் சம்பந்தமான திருத்தங்களை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ்விடம் வியாழக்கிழமை (6) கையளித்தோம்.

அததுடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் முகவர்களாக செயற்படும் சிலரே இஸ்லாம் பெண்களின் உரிமையை மறுக்கின்றதென பிரசாரம் செய்து வருகின்றனர் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (6) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், சுதந்திரத்தின் பின்னர் நாடு நாசமடைவதற்கு அரசியல்வாதிகளும் ஆட்சி பீடங்களில் இருப்பதற்காக தேவைக்கேற்ப தங்களுடைய மக்களை ஏமாற்றி இனவாதங்களையும் மதவாதங்களையும் ஏற்படுத்தி இந்த நாட்டை குட்டிச்சுவராக்கி விட்டனர்.

நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டு நாம் மிக வேதனையான ஒரு கால கட்டத்தில் இருக்கின்றோம். இவ்வாறான நிலையில் நாட்டு மக்களின் பெரியதொரு எதிர்பார்ப்பே நீதி அமைச்சர் விஜய தாச ராஜபக்சவின் ஒரு சட்டமூலமாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, இது காலத்தின் தேவை.

தேவையான ஒன்றை தேவையான நேரத்தில் கொண்டுவந்துள்ளீர்கள். ஆனால் அது பாரபட்சம் இல்லாமல் நடை முறைப்படுத்தப்படுமாக இருந்தால் நிச்சயமாக அது நாட்டுக்கு நல்லதாக அமையும்.

அதனால் நீதி அமைச்சர் விஜய தாச ராஜபக்ஷ் விடம் 18 முஸ்லிம் எம்.பி.க்கள் கையொப்பமிட்டு பௌசி எம்.பி. தலைமையில் முஸ்லிம், விவாக, விவாகரத்து சட்டம் சம்பந்தமான திருத்தம் சம்பந்தமாக ஒரு ஆவணத்தை கையளித்துள்ளோம்

முன்னாள் நீதி அமைச்சர் அலிசப்ரி அமைத்த குழுவினர் சமர்ப்பித்த ஆலோசனையை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ் அண்மையில் பாராளுமன்றத்தில் முஸ்லிம் எம்.பி.க்களிடத்தில் ஒப்படைத்தார்.

இதில் பல விடயங்கள் எங்களால் உடன்பட முடியாத விடயங்களாக இருந்ததால் அதில் குறிப்பாக முஸ்லிம் என்ற பெயர் அதாவது சொல் நீக்கப்பட்டு முஸ்லிம் நபர் என்று போடப்பட்டிருந்தது. நிக்கா என்ற வசனம் முற்றாக நீக்கப்பட்டு, நிச்சயப்படுத்தல் என்ற சொல் போடப்பட்டிருந்தது.

அதேபோன்று வழி (பெண்ணின் பாதுகாவளர்) தந்தை,தந்தை சார்ந்த அல்லது சகோதரன் அல்லது தாயின் சகோதரன் போன்ற வகையிலே இருக்க வேண்டும் .ஆனால் வழி முற்றாக அகற்றப்பட்டு, அதாவது பெண் விரும்புகின்ற ஒருவரை வழியாக இருக்கலாம் என்று போடப்பட்டிருந்தது.

அதுமட்டுமன்றி இன்னும் பல விடயங்களில் எங்களினால் உடன்பட முடியாது என்பதனை நீதி அமைச்சரிடம் நாம் சுட்டிக்காட்டியபோது அவர் நீங்கள் எல்லோரும் ஒன்றுகூடி உங்களின் திருத்தங்களை ஆலோசனைகளை முன்வையுங்கள் .இதனை இன்னும் காலதாமதப்படுத்த முடியாது என்று கூறினார்.

அந்த அடிப்படையில் பௌசி எம்.பி. தலைமையில் எங்களின் எம்.பி.க்கள், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவையும் இங்கு அழைத்து அவர்களுடன் ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்தி இந்த விடயங்களில் இஸ்லாமிய ஷரீயாவுக்குள் உள்ளடங்கிய திருத்தங்களை நீதி அமைச்சரிடம் கையளித்துள்ளோம்.

20 முஸ்லிம் எம்.பி.க்கள் இங்கிருக்கின்றார்கள் அதில் 18 பேர் கையொப்பமிட்டு இதனை கையளித்துள்ளோம். எனவே நீதி அமைச்சர் எமது வேண்டுகோளை ஏற்று செயல் பட வேண்டும் என கேட்கிறோம்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் முகவர்களாக செயற்படும் சிலர் இஸ்லாம் பெண்களின் உரிமையை மறுக்கின்றதென சொல்லுகின்றனர். இஸ்லாம் பெண்களை கற்பதற்கு அனுமதிக்கின்றது. இஸ்லாமிய பெண்கள்தான் மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக பல துறைகளில் உயர்ந்திருக்கின்றார்கள்.

ஆகவே இஸ்லாமிய மார்க்கம் பெண்களை எங்கும் கட்டுப்படுத்தவில்லை. ஆனால் இஸ்லாமிய ஷரீஆவில் ஒரு வரையறை இருக்கின்றது. எதை செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது, எது ஆண்களுக்குரியது, எது பெண்களுக்குரியது என்றெல்லாம் சொல்லப்பட்டுள்ளது.

எனவே இந்த விடயத்தில் நீதி அமைச்சர் நேர்மையாக செயற்பட வேண்டும். 22 இலட்சம் முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புத்தான் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா.. அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுத்தான் இந்த திருத்தங்களை முன்வைத்துள்ளோம்.. எனவே இதனை நியாமாக ஏற்று செயல்படுத்துங்கள் என்றார்.

# கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை கிழக்கில் நடத்துவது

## பொருத்தமில்லை! முன்னாள் பாராளுமன்ற உறுப்பனர் பா.அரியநேத்திரன்

தமிழ்நாட்டு முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு நூற்றாண்டுவிழா நடத்த கிழக்கு மாகாணம் பொருத்தமில்லை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசுக்கட்சி ஊடக செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்.

தமிழ்நாட்டு முதல்வர் அமரர் கலைஞர் மு.கருணாநிதியின் நூற்றாண்டுவிழா இந்தியாவில் தமிழ்நாடு முழுவதும் தற்போது இடம்பெறுவதற்கான முன் ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன. அவர் பிறந்த நாட்டில் அவர் ஆட்சிசெய்த தமிழ்நாட்டில் கட்டாயம் அந்த மக்கள் செய்வது நல்லது.

அவர் ஐந்து முறை தமிழகத்தின் முதல்வராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழகத்தின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் கருணாநிதியின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழகத்தின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் கருணாநிதியின் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் ஜுன் 2023 திங்கள் முதல் ஜுன் 2024 திங்கள் வரை தமிழக அரசால் கொண்டாட முடிவு செய்யப்பட்டது நல்ல விடயம்.

ஆனால் இலங்கையில் கிழக்குமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் விரைவில் கிழக்கு மாகாணத்தில் கருணாநிதியின் நூற்றாண்டு விழா செய்யவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஊடகங்களில் (05/07/2023) கருத்து வெளியிட்டிருந்தார்.

உண்மையில் கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா கிழக்கு மாகாணத்தில் நடத்துவது பொருத்தமான ஒன்றாக தற்போது இல்லை. வடக்கு கிழக்கு மக்கள் கடந்த பல சகாப்தங்களாக இனப்படுகொலைகளை சந்தித்தபோதெல்லாம் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் அழுத்தம் கொடுத்தாலும் ஆக்கபூர்வமாக அவர் எதையும் செய்யவில்லை என்ற ஒரு கருத்து வடக்கு கிழக்கு தமிழ்மக்கள் மத்தியில் உண்டு.

2006,ல் திருகோணமலை மாவிலையாற்றில் ஆரம்பித்த போர் 2009, மே,18,ல் முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற போது வடக்கு கிழக்கு தமிழர்கள் பல இலட்சம் மக்கள்



மாண்டபோதும் முதலமைச்சர் கருணாநிதியால் போரை நிறுத்தவோ, தமிழ்மக்களை காப்பாற்றவோ இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் செய்யவில்லை என்ற ஒரு மனவேதனை தமிழ்மக்கள் மத்தியில் உண்டு.

இவ்வாறான நிலையில் கருணாநிதியின் நூற்றாண்டு விழா கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றாலும் மக்கள் அதனை விரும்பி கலந்துகொள்ளும் நிலை ஏற்படாது என்பதே எனது தனிப்பட்ட கருத்து.

கலைஞர் கருணாநிதி அவர் போற்றுதற்குரியவர் பாராட்டுதற்க்குரியவர் என்பதெல்லாம் உண்மை ஆனால் அவர் தொடர்பாக விழா எடுக்ககூடிய இடமாக கிழக்கு மாகாணம் பொருத்தமானது இல்லை என்பதே எனது தாழ்மையான கருத்து எனக் குறிப்பிட்டள்ளார்.

**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில்
தவழும் மின்னிதழ் மற்றும்
அச்சு வடிவிலும் தினசரி மற்றும்
வார வெளியீடாக வெளிவரும்
தேசியம் பத்திரிகைக்கு
தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும்
ஆக்கபூர்வமான கட்டுரைகள்,
கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள்,
செய்திகள் போன்றவற்றை எமக்கு
அனுப்பி தேசியம் பத்திரிகையை
வலுவடையச் செய்யுங்கள்.

*No. 27, Kannathiddy Road, Jaffna.*
*Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com*
*Whatsapp : +94 76 567 3339*

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME



# வடக்கு ,கிழக்கு மாகாணங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும் - சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி!!



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு வரும் குற்றவியல் வழக்குகளை தமிழ் நீதியரசர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

அல்லது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (5) இடம்பெற்ற "நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்" தொடர்பான சபை ஒத்திவைப்பு வேலை விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு வரும் குற்றவியல் வழக்கு கோவைகள் தொடர்பில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இதற்கு வடக்கு மற்றும் கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ் மொழியில் வழக்குகள் நடப்பதே காரணம்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அந்த கோவைகள் வரும்போது ஆங்கில மொழி பெயர்ப்புகளில் தாமதம் காணப்படுகிறது.

ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தமிழ் நீதியரசர்கள் உள்ளனர் அவர்களிடம் அந்த வழக்குகளை ஒப்படைக்கலாம். இல்லாவிட்டால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும். இதன்மூலம் வழக்கு தாமதங்களை தவிர்க்கலாம் என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய நீதிய மைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நீதிமன்றங்களில் மொழி பெயர்ப்பாளர்களுக்கு நிலவும் பற்றாக்குறையே இதற்கு காரணம். இதனை தவிர்க்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

தொடர்ந்தும் உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன்,

பொய்யான வழக்கு தாக்கல்களும் நீதிமன்ற நடவடிக்கையின் தாமதத்துக்கு ஒரு காரணியாக உள்ளன. உதாரணமாக கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் பொலிஸார் எங்கள் மீது வழக்கு தொடர்ந்துள்ளனர். எவ்வித முறைப்பாடும் இன்றி மக்களுக்கு இடையூறு என வழக்கை தொடர்ந்துள்ளனர். இது முறையற்றது.

இதேவேளை நீண்ட காலமாக சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஜனாதிபதியுடனும் உங்களுடனும் (நீதியமைச்சர்) கலந்துரையாடியுள்ளோம். அண்மையில் தேவதாசன் என்ற புற்றுநோய் நோயாளி விடுதலை செய்யப்பட்டார். அதற்கு அரசுக்கு நன்றி கூறுகின்றோம்.

அத்துடன் நவரத்தினம் மற்றும் மதன சேகரம் என்ற கைதிகள் இருவர் நோய் வாய்ப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே வேளை அரசியல் கைதிகள் பலருக்கு புதிதாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

யாராயினும் வழக்கு தாமதங்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் வழக்கு தாமதங்களே குற்றங்கள் அதிகரிக்க காரணமாக அமைகின்றன. எதிர்காலத்தில் வழக்குகளை வகைப்படுத்தி அதை முடிப்பதற்கு கால வரையறைகளை நிர்ணயம் செய்து அதை விசாரிக்க வேண்டும் என்றார்.

# யாழில் மாணவி மீது ஆசிரியர் தாக்குதல்!

## வைத்தியசாலையில் அனுமதி!!

யாழ்ப்பாணத்தில் தரம் 03 இல் கல்வி கற்கும் மாணவி மீது ஆசிரியர் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரியவருகிறது.

யாழ். வலிகாமம் வலயத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தரம் மூன்றில் கல்வி கற்கும் மாணவியின் கையில் ஆசிரியர் பலமாகத் தாக்கியதில் மாணவி கையைத் தூக்க முடியாமல் அவதிப்பட்டுள்ளார். இந்நிலையில் மாணவியின் நிலையை அறிந்து கொண்ட பாடசாலை நிர்வாகம் மருந்தகம் ஒன்றில் நோவுக்குரிய மருந்துகளை வாங்கிப் பூசியுள்ளனர்.

எனினும் பாடசாலை விட்டதும் மாணவி வீடு சென்ற நிலையில் தனக்கு நடந்த சம்பவத்தை வீட்டாருக்கு தெரியப்படுத்தினார். இந்நிலையில் தமது மகள் கையை தூக்க முடியாமல் அவதிப்படும் நிலையை அறிந்த பெற்றோர் யாழ். போதனா வைத்தியசாலையில் மகளை அனுமதித்துள்ளனர்.

# சர்வதேச கண்காணிப்புடன் கூடிய அகழ்வுப்பணியின் மூலமே உண்மையை வெளிக்கொணர முடியும் - செல்வராசா கஜேந்திரன்!!



கொக்குத்தொடுவாய் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள அகழ்வுப்பணிகளை சர்வதேச கண்காணிப்புடன் முன்னெடுப்பதன் ஊடாக மாத்திரமே உண்மையை வெளிக்கொண்டு வரமுடியுமென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில் தண்ணீர் குழாய்களைப் பொருத்துவதற்காகக் கடந்த மாதம் 29 ஆம் திகதி நிலத்தைத் தோண்டியபோது மனித எச்சங்கள் மற்றும் ஆடைகள் என்பன தென்பட்டதை அடுத்து, அப்பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கடந்த 30 ஆம் திகதியன்று அவ்விடத்தைப் பார்வையிட்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிவான், அங்கு 6 ஆம் திகதியன்று வியாழக்கிழமை அகழ்வுப்பணிகளை ஆரம்பிக்குமாறும், அதுவரையில் அப்பகுதியிலுள்ள மனித எச்சங்கள் சிதைவுறாத வண்ணம் பாதுகாக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இச்சம்பவமானது இப்பகுதியில் வாழும் மக்களிடத்தில் மாத்திரமன்றி ஒட்டுமொத்த தமிழ்மக்கள் மத்தியிலும் அச்சத்தைத் தோற்றுவித்திருப்பதாகவும், இது மற்றுமொரு மனிதப் புதைகுழியாக இருக்கக்கூடும் அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்ட நபர்கள் இங்கு புதைக்கப்பட்டிருக்கக்கூடும் என்று அம்மக்கள் அஞ்சுவதாகவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இந்தப் பகுதி கடந்த 2009 ஆம் ஆண்டு வரை இராணுவக்கட்டுப்பாட்டிலேயே இருந்தது. கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் வாழும் மக்களை வெளியேறுமாறு 1984 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரால் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. அங்கிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டதன் பின்னர் அப்பகுதி இராணுவக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது" என்று கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அப்பகுதியில் மனித எச்சங்கள் கண்டறியப்பட்டிருக்கும் நிலையில், அவை வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் சடலங்களாகவோ அல்லது உயிருடன் பிடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளின் உடல்களாகவோ இருக்கக்கூடுமென மக்கள் அஞ்சுவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், எனவே சர்வதேசக் கண்காணிப்பின்கீழ் உரியமுறையில் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியுள்ளார்.

"இவ்விடத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய அகழ்வுப்பணிகள் இலங்கை அரசாங்கத்தினால் மூடிமறைக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. எனவே இதுகுறித்த சர்வதேச சமூகம் அதன் கரிசனையை வெளிப்படுத்த வேண்டும். இந்த அகழ்வுப்பணியை சர்வதேசக் கண்காணிப்பின்கீழ் முன்னெடுப்பதன் ஊடாக மாத்திரமே உண்மையை வெளிக்கொண்டுவரமுடியும் என்பதே எனது அபிப்பிராயமாகும்" என்று கஜேந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலை துணைவேந்தர் தெரிவு!

## பேரவை உறுப்பினர்களுக்கு தொலைபேசி அழைப்புகளில் அழுத்தம்!!



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெரிவுக்கான விசேட பேரவை அமர்வு எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களுக்கு அநாமதேயத் தொலைபேசி அழைப்புகள் வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேரவையின் உறுப்பினர்கள் சிலருக்குத் தெரியாத கைத்தொலைபேசி இலக்கங்களில் இருந்து அழைப்பு மேற்கொள்ளப்பட்டு,

"நாங்கள் அரச புலனாய்வுச் சேவையில் இருந்து (எஸ். ஐ. எஸ் ) அழைக்கிறோம். யார் துணை வேந்தராக வர வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? ஏன் அவரை விரும்புகிறீர்கள்? நாங்கள் தான் இரகசிய அறிக்கை கொடுக்க வேண்டும். அதற்காகத் தான் கேக்கிறோம்" என்று பேசப்பட்டதாகப் பேரவை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தெரிவுக்கான பேரவை கூட்டம் நெருங்கி வரும் நேரத்தில் இவ்வாறு அழைக்கப்படுவது நல்லதல்ல என பேரவை உறுப்பினர்கள் சிலர் விசனமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

# வடக்கை முன்னேற்ற புலம்பெயர் தமிழர்களே முதலிடுங்கள்..!ஆளுநர் சார்ள்ஸ் அழைப்பு..!



"எமது வடக்கு மாகாணத்தைப் பொருளாதார ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். அதுவே பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள எமது பகுதியை மீட்டெடுக்க நம்மிடம் உள்ள ஒரேயொரு உபாயம். புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை அதிகரித்தல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் என வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. மாகாணத்தின் முன்னேற்றத்துக்காக அனைத்துத் தரப்புக்களும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள நிலையில், மாகாணத்தின் முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"எமது மாகாணத்தின் முன்னேற்றத்துக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. மாகாணத்தின் முன்னேற்றத்தை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் திட்டங்கள் எதிர்பார்க்கும் பெறுபேற்றைத் தருவதற்கு அதிகாரிகள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்புக்களையும் எதிர்பார்க்கின்றேன்.

முதற்கட்டமாக வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தைக் முன்னேற்றுவதற்கான பலப்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசிக்கப்படுகின்றது.

புலம்பெயர்ந்தவர்களின் முதலீடுகளை வடக்கு மாகாணத்தில் அதிகரித்து பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான திட்டங்கள் ஆலோசிக்கப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தில் முதலீடுகளை மேற்கொள்பவர்களுக்கு சலுகைகளை வழங்குவது தொடர்பாகவும் சிந்திக்கப்படுகின்றது. சுற்றுலாத்துறையை இன்னும் விரிவுபடுத்தி, அதனூடான வருமானமீட்டலையும் வடக்குக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆலொசனைகளையும் பெற்று வடக்கு மாகாணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல எதிர்பார்க்கின்றேன்.

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் ஒழிப்பு, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்கள், கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் படிப்படியாக முன்னெடுக்கப்படும். எமது மாகாணத்தைச் சிறந்த மாகாணமாக மாற்ற வேண்டும் என்ற அவா எனக்கு உண்டு. மாகாணத்தின் முன்னேற்றத்துக்காக நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் சிறந்த பெறுபேற்றைத் தருவதற்கு அனைத்துத் தரப்பினரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

# சௌபாக்கியா வீடமைப்பு திட்டத்தின் கீழ் வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு!!





சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான சௌபாக்கியா வீடமைப்பு திட்டத்தின் கீழ் பிரதேச செயலக சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட 06 வீடுகளுக்கான (750,000/= பெறுமதியான 03 வீடு, 250,000/= பெறுமதியான 03 வீடு) அடிக்கல் நடும் ஆரம்ப நிகழ்வு (05) புதன்கிழமை நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலிலும், சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம் அவர்களின் தலைமையிலும் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் அவர்களும், அதிதிகளாக சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் நியாத் ஏ மஜீத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ்.நிபாயா, அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.பவாஸ், பிரிவுக்கனை கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட சமுர்த்தி அமைப்புக்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பாலஸ்தீன அகதிமுகாம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலை இலங்கை கண்டிக்க வேண்டும்!

## ஹக்கீம் எம்.பி சபையில் கோரிக்கை!!



இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீன் அகதிமுகாம் மீது மேற்கொண்டுள்ள தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கத்தின் கண்டனத்தை தெரிவிக்க வேண்டும்.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சபையில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (6) ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பலஸ்தீனில் அகதி முகாம்கள் இஸ்ரேல் இராணுவத்தினரால் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றன. இது அவர்களின் இராணுவ அதிகாரத்தைக்கொண்டு நடத்தப்படும் தாக்குதலாகும்.

இஸ்ரேல் இராணுவத்தினர் அங்குள்ள அகதி முகாம்களில் மேற்கொண்ட தாக்குதலில் 12பேர் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேல் இராணுவத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்து பல நாடுகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

இஸ்ரேல் தூதுவர் உங்களை சந்தித்திருக்கிறார். ஆகக்குறைந்தது எமது கண்டனத்தையாவது நாங்கள் தெரிவிக்க வேண்டும். அரசாங்கம் சார்பில் நாங்கள் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

இந்த இராணுவ நடவடிக்கையை மீண்டும் மேற்கொள்வதாக இஸ்ரேல் பிரதமர் தெரிவித்திருக்கிறார். இதனால் அதிகமான இளைஞர்கள் பாதிக்கப்படுவார்கள்.

அதனால் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இதற்கு வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி பதிலளிக்கையில்,

இந்த சம்பவம் யாரும் எதிர்பார்க்கப்படாத ஒன்று. ஒரு மாதத்துக்கு முன்னர் கண்டனத்தை தெரிவித்திருந்தோம். இந்த விடயம் குறித்தும் அவதானம் செலுத்துவோம்.

அத்துடன் இலங்கை அரசாங்கம் என்போதும் பலஸ்தீன் மக்களுக்காக குரல்கொடுத்து வந்திருக்கிறது. அவர்கள் அவர்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த இடத்தில் அமைதி நிலவும்வரை நாங்கள் குரல் கொடுப்போம் என்றார்.

# பெண்காதி விடயத்தில் அடம்பிடிக்காது இஸ்லாம் கூறும் விடயங்களை ஹக்கீம் ஏற்க வேண்டும் - ஐக்கிய காங்கிரஸ்



இஸ்லாம் அனுமதிக்காத பெண் காதி விடயத்தில் ரவூப் ஹக்கீம் தனது பிடிவாதத்தை மாற்றி ஏனைய முஸ்லிம் எம்பிமாருடன் இணைந்து அமைச்சர் விஜயதாச முன்வைத்த திருத்தத்துக்கு மாற்றமான திருத்தத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி உலமா கட்சி தெரிவித்துள்ளது.

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்ததாவது,

முஸ்லிம் திருமண சட்டத்தில் எத்தகைய திருத்தமும் கூடாது என்பதே எமது கட்சியின் முடிவாகும். ஆனாலும் அண்மையில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அவர்களால் முஸ்லிம் திருமண சட்டத்தில் உள்ள, நிகாஹ் என்ற வசனம், முஸ்லிம் என்ற சொற்பதம் போன்றவற்றை நீக்கி, பெண் காதி, பெண் பதிவாளர் போன்ற பல தான்தோன்றித்தனமான திருத்தங்களை முன் வைத்து இதற்கு பாராளுமன்ற முஸ்லிம் எம்.பீக்களின் ஒப்பத்துக்காக முன் வைத்திருந்தார்.

இதனை ஏற்காத முஸ்லிம் எம்.பீக்கள் ஜம்மிய்யத்துல் உலமாவுடன் இணைந்து வேறு திருத்தங்கள் கொண்ட புதிய திருத்த பொதியை முன் வைத்துள்ளதாகவும் அதை பதினேழு எம்.பீக்கள் ஏற்றுக்கொண்டதாகவும் அதில் பெண் காதி நீக்கப்பட்டிருப்பதால் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் மட்டும் அதை ஏற்காது பெண் காதி வேண்டும் என அடம்பிடிப்பதாகவும் தகவல்கள் சொல்கின்றன. இந்தப் பொதியின் முழு அம்சமும் எமது கட்சிக்கு இன்னமும் கிடைக்கவில்லையாயினும் இது பற்றிய ஊர்ஜிதமான தகவல்கள் கிடைத்துள்ளன.

பெண் காதிக்கு இஸ்லாத்தில் இடமில்லை என்பது இஸ்லாத்தின் ஆரம்ப கால உலமாக்களின் ஏகோபித்த முடிவாகும்.

முஸ்லிம் என்ற பெயர் கொண்ட கட்சித்தலைவரான ரவூப் ஹக்கீம் அவர்கள் முஸ்லிம் திருமண சட்டத்தில் எந்த திருத்தமும் வேண்டாம் என கூறியிருந்தால் அவரை நாம் மிகவும் வரவேற்றிருப்போம். மாறாக இஸ்லாம் ஏற்காத பெண் காதி விடயத்தில் முஸ்லிம்களின் அதிக வாக்குகளைக்கொண்ட ரவூப் ஹக்கீம் அடம்பிடிப்பது இஸ்லாத்துக்கும் அவரது கட்சிக்கு வாக்களித்த இலங்கை முஸ்லிம்களுக்கும் அவமானத்தை ஏற்படுத்துவதாகும்.

ஆகவே ரவூப் ஹக்கீம் அவர்கள் பெண்காதி விடயத்தில் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை அவரிடம் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# வாகரை வட்டுவான் இறால் பண்ணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!!





மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வட்டுவானில் அமைக்கப்பட்டுள்ள இறால் வளர்ப்பு பண்ணையினை தடுத்து நிறுத்துமாறு கோரி எதிர்ப்பு தெரிவித்து இறால் பண்ணைக்கு முன்னால் வியாழக்கிழமை (6) நன்னீர் மீன்பிடியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாங்கேணி, காயன்கேணி, வட்டவான, ஆலங்குளம், இறாலோடை ஆகிய மீனவ அமைப்புக்கள் இணைந்து குறித்த இறால் பண்ணைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர்.

இதனையடுத்து வியாழக்கிழமை (6) காலை 10 மணியளவில் காயன்கேணி பழைய பாலத்துக்கு அருகில் 50 க்கு மேற்பட்ட மீனவர்கள் பொதுமக்கள் ஒன்றிணைந்து அசுத்தப்படுத்தாதே வாவி நீரை அசுத்தப்படுத்தாதே, அழிக்காதே அழிக்காதே மீன் வளத்தை அழிக்காதே, "சுத்தமான காற்றை சுவாசிக்க விடு" "மீனவரின் வாழ்வாதாரத்தை அழிக்காதே, போன்ற பதைதைகள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பியவாறு ஆர்ப்பாட ஊர்வலமாக இறால் பண்ணைக்கு முன்னால் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது வட்டவான் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள இறால் பண்ணையினால் குறித்த வாவி அசுத்தமடைந்து வருவதாகவும், குறித்த இறால் பண்ணையில் இருந்து திறந்து விடப்படும் நீரினால் ஆற்றில் மீன்கள் இறந்து காணப்படுவதுடன் மீன் இறால் வளங்கள் அழிந்து போவதினால் தங்கள் பொருளாதார ரீதியில் பின்நோக்கி போவதாகவும்.

இது தொடர்பாக யாரிடம் முறையிடுவது என்றும் தெரியாமல் உள்ளதாகவும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் இதனை கவனத்தில் எடுத்து இப்பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் ஆர்பாட்டகாரர்கள் கருத்து தெரிவித்தனர் சுமார் ஒரு மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து விலகி சென்றனர்.

# உதயநிதி ஸ்டாலினுடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்திப்பு!



தமிழ்நாட்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்து, இலங்கை நாட்டின் பொருளாதாரம் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை தமிழ்நாட்டுக்கு மிக நெருக்கமான அயல் நாடாக இருப்பதால், இருதரப்பு உறவு பல நூற்றாண்டுகளாக தொடர்வதாகவும், தமிழ் நாட்டின் ஆதரவு இலங்கை மக்களால் எப்போதும் அங்கீகரிக்கப்பட்டு பாராட்டப்படுவதாகவும் செந்தில் தொண்டமான் உதயநிதி ஸ்டாலினிடம் தெரிவித்தார்.



ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS
BIG SALE! BIG SAVINGS
மங்களா காட்சியறை
Mangala
யாழின் தளபாட உற்பத்தியாளர்



Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.
No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 8367 | +94 777 286 069

சசிகா லேணர்ஸ்
SASIKA LEARNERS
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழியிலும் வாகனப் பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்புகள்
- அனைத்து கிளைகளிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்
- தவணைக் கட்டணம் மற்றும் விரும்பிய நேரத்திலான பயிற்சி

தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
0777 226 247 / 077 614 0361 / 021 221 7678 / 021 221 7578
www.sasikalearners.com






காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன்
நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை



மகாநதி ஜ்வெல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
MAKANATHY JEWELLERY
Manufacturers of Gold Jewels
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
72A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
CALL NOW : 077 581 2025

STUDIO Vista
CAPTURING NATURE BEAUTY
PROFESSIONAL PHOTOGRAPHY



PHOTOGRAPHY STUDIO



BOOK NOW
+94 777 47 4498



EVENT | VIDEO | FASHION | WEDDING | CORPORATE | MATERNITY | COMMERCIAL | STUDIOS | FRAMES | ALBUM DESIGNING | ALBUM MAKING | VIDEO EDITING | MUG & ALL SUBLIMATION PRINTING...
K.K.S ROAD, THAVADY JUNCTION, KONDAVIL, JAFFNA.



அ. கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS



- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.

We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |









இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.